https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இரவாளன் தொல்குடியினரின் பண்பாட்டு வழக்காறுகள்

**ந. நதியா**
முனைவர்பட்ட ஆய்வாளர், இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ச. கவிதா**
பேராசிரியர் மற்றும் தலைவர், நெறியாளர்
இந்தியமொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதகுலம் பல்வேறு இனங்களாகவும் சமூகங்களாகவும் வேறுபட்டுக் காணப்படுகிறது. மனிதகுலத்தின் சமூகப் பண்பாட்டு வளர்ச்சியை அறிவதற்கு இன்று சான்றாக விளங்குபவர்கள் பழங்குடிகளே ஆவர். அத்தகைய பழங்குடியினரின் சமூகங்களும் பண்பாடுகளும் காலம் நிகழ்த்தி வரும் மாற்றத்தால் மறைந்து வருகின்றன. இந்தியாவில் மொத்தம் 750 பழங்குடிகள் உள்ளனர். அவர்களைப் பேசும் மொழியின் அடிப்படையில் 4 மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, மக்கள் தொகையில் 1.17 விழுக்காடு பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் தற்பொழுது 37 பழங்குடிகள் உள்ளனர். இவர்களில் இரவாளன் பழங்குடியினரும் ஒருவர். இரவாளன் பழங்குடியினர் தமிழ்நாட்டில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஆனைமலைப் பகுதிகளிலும் கேரளாவில் பாலக்காடு, இடுக்கி, வயநாடு பகுதிகளிலும் காணப்படுகின்றனர். இவர்களுடைய மொழி "கரிநாவிளு" எனப்படுகிறது. தற்பொழுது இவர்கள் மொழி அழிந்து வரக்கூடிய நிலையில் உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள இரவாளப் பழங்குடிகள் தமிழோடு அவர்களுடைய மொழியைக் கலந்தும் கேரளாவில் இருப்பவர்கள் மலையாள மொழியோடு அவர்களுடைய மொழியைக் கலந்தும் பேசுகின்றனர். இத்தகைய இரவாளப் பழங்குடிகளின் உணவு, தொழில், கல்வி, சடங்கு, வழிபாடு, புழங்குபொருட்கள் உள்ளிட்ட பண்பாட்டுக் வழக்காறுகளை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**கலைச் சொற்கள்:** *பழங்குடி, இரவாளன், திபெத்தியம், ஆஸ்திரியம், ஆரியம், திராவிடம்*

## இந்தியப் பழங்குடிகள்

*'பழங்குடி' என்னும் சொல் பலதரப்பட்ட நிலைகளில் வாழும் பழங்குடிப் பிரிவினர்களைப் பொதுமைப்படுத்தும் ஒரு சொல்லாட்சியாகும். 'பழங்குடிகள்' மிகத் தொன்மையானவர்கள். இவர்களின் சமூகங்களும் பண்பாடுகளும் காலம் நிகழ்த்தி வரும் மாற்றத்தால் மறைந்து வருகின்றன. இந்தியாவில் பழங்குடிகள் மூன்று முக்கிய இடங்களாக வகைப்படுத்தப்படுகின்றனர். அவை. மங்கோலியர், நீக்ரிட்டோவினர், தொன்மை ஆஸ்திரேலியர். மேலும், பேசும் மொழியால் நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.*

1. *திபெத்திய - பர்மிய மொழி*
2. *ஆஸ்திரிய - ஆசிய மொழி*

3. இந்திய - ஆரிய மொழி
4. திராவிட மொழி

இந்தியாவில் உள்ள 705 பழங்குடிகளிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட முதல் இரண்டு பழங்குடிகள் (கோண்டு, பில்லர்) திராவிட பழங்குடிகள் தான்.

### தமிழகப் பழங்குடிகள்

தமிழகத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் இயற்கை எழில்மிக்க மலைகளாக அமைந்துள்ளன. பழங்குடி மக்களின் தொழில் சார்ந்த நிலைகளுக்கு ஏற்ப அம்மக்களின் வாழிடங் கள் அமைகின்றன. இன்றும் மலைப் பகுதிகளிலும் மலை சார்ந்த சமவெளிப் பகுதிகளிலும் பெரும்பாலான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒரு காலத்தில் அரச வம்சத்தினராக இருந்து பிறர் படையெடுப்பின் காரணமாகவும், பஞ்சம், கடுமையான வறட்சி காரணமாக வும் இடம்பெயர்ந்தவர்களும் இன்று பழங்குடி மக்களாக வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, மலைப்பகுதிகளிலிருந்து தொழில் நிமித்தமாகவும், சுற்றுச்சூழல் மாறுபாடுகள் காரணமாகவும் சமவெளி பகுதிகளுக்கு வந்தவர்களும், பிற மன்னர்களின் படையெ டுப்பிற்கு பயந்து மலைப் பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்களும் இன்றைய பழங்குடி மக்களாக உள்ளனர். 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகையில் 1.17 விழுக்காடு பழங் குடியினர் வாழ்ந்த வருகின்றனர் என்பதைக் குடிமக்கள் பதிவேடு வழி அறிந்து கொள்ள முடிகிறது. 1956இல் 42 பழங்குடிகள் இருந்தனர். கடந்த காலங்களில் ஆறு சமூகங்களின் அங்கீகாரம் விளக்கிக் கொள்ளப்பட்டு 36 பழங்குடியினர் இருந்தனர். 2022ல் குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து மொத்தம் 37 பழங்குடியினர் தற்பொழுது உள்ளனர்.

### இரவாளன் பழங்குடியினர்

இரவாளன் பழங்குடியினர் இறவுளர், இறவன், இறவாளர், எறவல்லன், எறவல்லர், வில்வேடன், அம்புவில்லுவேடன் போன்ற பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் திருப்பூர், கோவை மாவட்டத்தி லுள்ள பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, இந்திரப்புதூர் நகர், கரட்டுப்பதி, வாய்க்கா மேடு, ஆனைமலை, வேட்டனூர், காளியா புரம், சமனாம்பதி, பாலக்காடு, அஞ்சாமயி லேஜ் போன்ற இடங்களிலும் குமரி நெல்லை மாவட்டங்களிலும் சிதறலாகக் காணப்படுகின்றனர். மேலும் சென்னை, திருவள்ளூர், ஈரோடு, நாமக்கல், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றனர். இவர்கள் கோவை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பாலக் காட்டுப் பகுதிகளிலும் வசிக்கின்றனர். முன்பு கேரளமும் தமிழகத்தின் ஒரு பகுதி யாக இருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், இவர்கள் கேரளத்தில் வயநாடு, மலப்புரம் திரிச்சூர், எர்ணாகுளம், இடுக்கி, ஆலப்புழா பகுதிகளிலும் பரவி இருக்கின்றனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக 2021ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய அரசு குடிமக்கள் கணக்கெடுப்பு பதிவு செய்ய வில்லை. எனவே, 2011ஆம் ஆண்டு எடுக்கப் பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் இரவாளர் பழங்குடிகள் 2,8 7 1 பேர் வாழ்கின்றனர். அவர்களில், ஆண்கள் 1,438 பேரும், பெண்கள் 1433 பேரும் உள்ளனர். இவர்களில் கிராமப் பகுதியில் 1,934 பேரும், நகரப் பகுதியில் 937 பேரும் வாழ்கின்றனர். கேரளாவில் 4,797 பேர் வாழ்கின்றனர். அவர்களில், ஆண்கள் 2,6 3 2 பேரும், பெண்கள் 2,4 3 5 பேரும் உள்ளனர். இவர்களில் கிராமப் பகுதியில் 4,776 பேரும், நகரப் பகுதியில் 21 பேரும் வாழ்கின்றனர்.

இரவாளன் பழங்குடியினர் பரம்பரை பரம்பரையாகவே மேற்குத் தொடர்ச்சி மலையில் தங்கி வாழ்ந்து வந்ததாகவும் கூறுகின்றனர். இரவாளன் பழங்குடிகள் ‘வில்வேடர்’ என்றும் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். வில்வேடர்களாக இருந்த இவர்கள் ‘இரவாளன்’ என்று பெயர் பெறக் காரணம் நிறைய இருக்கின்றன.

### இரவாளன் பெயர்க்காரணம்

‘இரவலர்’ என்பது சங்க இலக்கியத்தில் ஏழையரான கலைஞர்களைக் குறிக்கிறது. தமிழ்நாட்டில் எதுவுமின்றி பிச்சையெடுக்கும் வழக்கம் இல்லை. சமண மதத்தின் துறவிகள் மூலமாகவே இவ்வழக்கம் பரவியிருக்க வேண்டும். ‘பிட்சை’ என்ற வடசொல்லுக்கு நிகரான ‘இரத்தல்’ என்ற சொல்லைத் திருவள்ளுவர் பயன்படுத்துகிறார். சங்க இலக்கியத்தில் பயன்படுத்தக்கூடிய ‘இரவலர்’ என்ற சொல்தான் இப்பொழுதுள்ள இரவாளன் பழங்குடிகளைக் குறிக்கிறதா என்றால்? இல்லை. ஏனெனில், பழங்குடி மக்களிடம் பிச்சை எடுக்கும் வழக்கம் இல்லை. இரவாளன் பழங்குடிகள் பிச்சை எடுப்பதை இழிவாகக் கருதுகின்றனர்.

வில்வேடன் ஒருவன் அருகில் உள்ள நில உடமையாளரான ஒரு கவுண்டர் வீட்டுக்கு

சென்று இருக்கிறான். அவன் வீட்டினுள் செல்லாமல் இரவாரத்திற்கு (தாழ்வாரத் திற்கு) அருகிலேயே நின்று விட்டான். அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர் ஆன கவுண்டர் எவ்வளவு சொல்லியும் வீட்டினுள் செல்லாமல் அங்கேயே நின்று விட்டதால் கவுண்டர் கோபப்பட்டு “இரவாரத்திற்குப் பக்கத்தில் நின்ற நீயும் உன் இனமும் இரவாளர்களாகப் போங்கள்” என்று கூறினாராம். அன்று முதல் இரவாளன் என்று இவர்கள் அறியப்படுவதாகவும், அடுத்தடுத்து அமைந்திருந்த இரு வில்வேடர் கூட்டங்களுக்கு இடையே சண்டை ஏற்பட்டுவிட, சண்டைக்குப் போக ஆயுதம் இல்லாமல் அருகில் உள்ள கவுண்டர் வீட்டுக்குச் சென்று அரிவாள் இரவலுக்கு வாங்கிப் போய் சண்டை இட்டனராம். எனவே இரவலுக்கு அரிவாள் வாங்கியதால் இரவாளன் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இரவாளன் பழங்குடிகள் ‘வில்வேடர்கள்’ என்றும் அழைக்கப்படுகின்றனர். இறையனார் அகப்பொருள் உரையில் குறிஞ்சித் திணை மக்களைக் கூறுமிடத்து ‘இறவுளர்’ என்ற இனத்தையும் ஆசிரியர் கூறுகிறார். குறிஞ்சி நில மக்களின் தொழில் வேட்டையாடுதலும் கிழங்கு – தேன் போன்றவற்றை சேகரித்த லும் ஆகும். இரவாளர்களின் தொழிலும் இதுவே ஆகும். எனவே குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த ‘இறவுளர்’ களாக இரவாளன் பழங்குடிகள் இருக்கலாம் எனவும் என்னப்படுகிறது.

## மொழி

இரவாளன் பழங்குடியினர் தங்களுடைய மொழியைக் ‘கரிநாவிளு’ என்றும் ‘இரவலா’ என்றும் அழைத்துக்கொள்கின்றனர். இவர்க ளுடைய மொழியில் பழந்தமிழ் கூறுகளும் மலையாள மொழிக்கூறுகளும் காணப்படு கின்றன. எனவே இவர்களுடைய மொழி தமிழ்நாடும் கேரளமும் தனியாகப் பிரிவதற்கு முன்பே வழங்கிவந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள இரவாளப் பழங்குடிகள் தமிழோடு அவர்க ளுடைய மொழியைக் கலந்தும் கேரளாவில் இருப்பவர்கள் மலையாள மொழியோடு அவர்களுடைய மொழியைக் கலந்தும் பேசுகின்றனர். எனவே இவர்களுடைய மொழி அழிந்து வரக்கூடிய நிலையில் உள்ளது.

## பண்பாட்டு வழக்காறுகள்

பண்பாட்டு வழக்காறு என்பது தமிழில் ஒரு முக்கியமான கருத்தாகும். இது இரண்டு சொற்கள் இணைந்ததாகும்:

- பண்பாடு - ஒரு சமூகத்தின் கலாசாரம், மரபுகள், பழக்கவழக்கங்கள், கலை, மொழி, மதம், ஒழுக்கம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை குறிக்கிறது.
- வழக்காறு - வழி, மரபு, பின்பற்றப்படும் நடைமுறை அல்லது நடைமுறைப்படி நிலைத்திருக்கும் வழி என்ற பொருள்.

பண்பாட்டு வழக்காறு என்பது ஒரு சமூகத்தில் அல்லது இனத்தில் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் கலாச்சார வழிமுறைகள், வாழ்க்கை முறை, மற்றும் சமூக ஒழுக்க விதிகளை குறிக்கும். மேலும், பண்பாட்டு வழக்காறு என்பது ஒரு சமூகத்தின் அடையாளமாகவும், அதன் மரபு மற்றும் வாழ்க்கைமுறையின் பிரதிபலிப்பா கவும் இருக்கின்றது.

## வாழ்விடம்

இரவாளன் பழங்குடிகள் தாங்கள் வாழும் இடத்தைப் ‘பதி’ என்றும் வீட்டினைக் ‘கூரே’ என்றும் அழைக்கின்றனர். இவர்களைப் போலவே காடர் பழங்குடிகளும் தாங்கள் வாழும் இடத்தைப் ‘பதி’ என்று அழைக்கி ன்றனர். காடர்களையும் மலையர்களையும் போல இரவாளன் பழங்குடிகளுக்கு அலைந்து திரியும் பழக்கம் இல்லை. இவர்கள் இருளர், மலசர், மலைமலசர், காடர், புலையர்களைத் தங்களுக்கு கீழானவர்களாகக் கருதுகின்றனர். எனவே அவர்களிடம் இவர்கள் பழகுவதில்லை. அவர்களை இவர்களுடைய குடியிருப்பிற்கு வர இவர்கள் அனுமதிப்பதில்லை. மலசர், மலைமலசர், காடர், புலையர்கள் மாட்டிறைச்சியும் இருளர்கள் எலிக்கறியும் சாப்பிடவது இதற்கு ஒரு காரணமாகும். முதலில் இரவாளன் இனத்தவர்கள் மலைகளில் தான் வசித்து வந்தனர். பின்னர் மலையடிவாரத்திற்கு வந்து சமதளத்தில் வீடுகளைக் கட்டினர். ஐம்பது வருடங்களு க்கு முன்பு வனச்சரகம் இவர்களுக்கு ஓட்டு வீடுகள் கட்டிக் கொடுத்திருந்தனர். தற்பொழுது கான்கிரீட்டாலான பசுமை வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளது. இவர்களுக் கான தனி சுடுகாட்டையும் வனச்சரகம் கொடுத்துள்ளது.

## தொழில்

இவர்களின் முக்கியத் தொழில் விவசாய மாகும். இவர்கள் நிலத்தில் சோளம், சாமை, துவரை, எள் ஆகியவற்றை மே மாதத்தில்

விதைத்து நவம்பரில் அறுவடை செய்கின்றனர். மீதி நாட்களில் கூலி வேலை செய்பவர்களாக உள்ளனர். ஆண்கள் பிணையாட்களாக வேலை செய்வர். பெண்கள் அவ்வாறு பிணைப்பட்டவர்களாக இருப்பதில்லை. இப்பொழுதுள்ள பழங்குடிகள் சாதாரண மக்களுடைய நிலங்களுக்கு கூலிக்காக வேலைக்குச் செல்கின்றனர். இவர்களுக்கென சொந்த நிலங்கள் எதுவும் இல்லை.

### உணவு

சாமை பழைய இரவாளப் பழங்குடிகளின் வழக்கமான உணவாக இருந்திருக்கின்றது. இராகி, கம்பு, நெல், பருப்பு வகைகள் சேர்த்து உண்டுள்ளனர். புளி, உப்பு, மிளகாய் ஆகியவற்றைத் தங்களுடைய உணவுகளில் சேர்த்துள்ளனர். இறைச்சிகளையும் உண்பர். தற்பொழுது அவர்களும் இப்பொழுதுள்ள சாதாரண மக்களைப் போன்ற உணவுப் பழக்கத்திற்கு மாறிவிட்டனர்.

### உடை

இரவாளப் பழங்குடிகளில் ஆண்கள் வேட்டியும், தலைப்பாகையும் பெண்கள் சேலையும் அணிவர். கழுத்தில் வெள்ளிப் பாசிமாலையினையும் அணிவர். இப்பொழுதுள்ள பழங்குடிகள் அனைவரும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப தங்களை மாற்றிக்கொண்டுள்ளனர்.

### கல்வி

இரவாளப் பழங்குடிகளில் ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் என அனைவரும் இன்று பள்ளிகளுக்குச் செல்கின்றனர். ஆனால் அவர்கள் கல்லூரிகளுக்குச் செல்வதில்லை. பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஆண்கள் வேலைக்குச் செல்கின்றனர். பெண்களுக்குத் திருமணம் செய்தும் வைக்கின்றனர். இவர்கள் திருமணத்தைத் தங்கள் இனத்துக்குள் மட்டுமே செய்து கொள்கின்றனர்.

### சடங்குகள்

**பிறப்புச் சடங்கு -** ஒரு பெண் கருவுற்ற ஏழாவது மாதத்தில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு விருந்து வைத்துப் பெண்ணை அழைத்துச் செல்வர். பிறகு பேறு காலத்திற்கு 15 நாட்கள் முன்பாக பெண்ணை வீட்டிலிருந்து 40 அடி தூரத்தில் உள்ள முட்டுச்சாலையில் (குடிசை) தங்க வைவப்பர். குழந்தை பிறந்நவுடன் தாயையும் சேயையும் வெந்நீரில் குளிக்க வைப்பர். கருவுற்ற பெண்ணிற்கு மருந்தாகக் கள்ளில் கலக்கப்பட்ட மிளகு, சுக்கு, பனைவெல்லம் ஆகியன தரப்படுகிறது. மது வகைகளும் குடிக்கத் தரப்படுகிறது. தலைப்பேறாக இருந்தால் 3 மாதம் முட்டுச்சாலையில் இருக்கச் செய்கின்றனர். இரண்டாவது அல்லது மூன்றாவது பிரசவமாக இருந்தால் 15 நாட்கள் முட்டுச்சாலையில் இருக்கச் செய்கின்றனர். அதன்பிறகு மற்றொரு குடிசைக்கு மாற்றப்படுகிறாள். தலப்பிரசவத்திற்கு 90 நாட்களும், அடுத்துள்ள பிரசவங்களுக்கு 30 நாட்களும் தீட்டு நாட்களாக கணக்கிடப்படுகிறது. தீட்டு முடிந்து பெண்ணை வீட்டிற்கு அழைக்கும் போதும் விருந்து வைக்கின்றனர்.

**பூப்புச்சடங்கு -** பெண் பருவமடைந்தவுடன் செய்யும் சடங்கை பூப்புச் சடங்கு என்பர். முதலில் பெண்ணின் தாய்மாமனிடம் விசயத்தைச் சொல்லி குடிசை கட்டுவர். இதையும் முட்டுச்சாலை என்றே அழைப்பர். 15 நாட்கள் வரை அந்தப் பெண் முட்டுச் சாலைக்குள் தான் இருக்க வேண்டும். சிலர் 7 நாட்களும் இருக்க வைப்பர். பருவமடைந்த பெண் அந்த முட்டுச் சாலையை விட்டு வெளியே வரக்கூடாது. சீர் செய்யும் வழக்கமும் காணப்படுகிறது.

**திருமணச் சடங்கு - "மன்றல் தேஎத்து மன்றல் எட்டனுள்"** (தொல்.பொருள்-1038) என்ற நூற்பாவில் தொல்காப்பியர் எண் வகை திருமணத்தைப் பற்றிக் கூறுகிறார். ஆனால், இரவாளன் பழங்குடிகள் மூன்று வகை திருமண முறைகளையே பின்பற்றுகின்றனர். தமிழ்நாட்டு மக்கள் எவ்வாறு திருமணச் சடங்குகள் செய்வார்களோ அதைப் போலவே இவர்களின் திருமணச் சடங்கும் காணப்படுகிறது. பெண் கேட்டல், பரிசம் போடுதல், தேதி நிச்சயித்தல், சீர் செய்தல், வரவேற்பு, பந்தல் போடுதல் ஆகியவை பின்பற்றப்படுகிறது. இதனால் இவர்கள் செந்தமிழ் குடிகளாக இருக்கலாம் என்றும் எண்ணப்படுகிறது. பழைய தலைமுறையைச் சார்ந்த இரவாளன் பாங்குடி மூதாட்டிகள் தாலி அணிவதில்லை. வெறும் மஞ்சள் கயிற்றை மட்டுமே அணிகின்றனர். அதற்கு ஒரு கதை சொல்கின்றனர். முன்பு தாலி வாங்கப் போன இரவாளன் ஒருவன் புயல், மழை காரணமாக இறந்துவிட்டதால், தாங்கள் தாலி கட்டுவது கடவுளுக்குப் பிடிக்கவில்லை என்று கருதி தாலி கட்டுவதில்லை என்ற கதை சொல்லப்படுகிறது. மேலும் மறுமணமுறையை இரவாளன் பழங்குடிகள் பின்பற்றுகின்றனர். கைம்பெண் ஒருத்தி மனைவியை இழந்த ஒருவனையே மணக்க முடியும். மணமுறிவு செய்யப்பட்டவள்

மனைவியை இழந்த ஒருவனையே மீண்டும் மணக்கலாம். இவர்களிடம் வரதட்சணை கொடுக்கும் வழக்கம் இல்லை. குழந்தை மணம் முன்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இப்பொழுது இல்லை.

**இறப்புச் சடங்கு** - இரவாளன் பழங்குடியினர் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் உள்ளவர்கள். சாவுத் தீட்டினை ஐந்து நாட்கள் மட்டுமே மேற்கொள்கின்றனர். ஆறாம் நாள் துக்கம் கொண்டாடப் படுகிறது. இறந்தவர்களின் உடலை வைத்து ஒப்பாரி பாடுதல், இறந்தவர்களுக்கு பாடை கட்டுதல், கருமாதி செய்தல் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர்.

**நம்பிக்கைகள்** - நம்பிக்கைகள் பொதுவாக எல்லா மக்களிடமும் காணப்படக்கூடிய ஒன்றாகும். ஆனால் இவை பழங்குடிகளிடம் இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றன. இரவாளன் பழங்குடிகள் ஆவிகள் இருப்பதாக நம்புகின்றனர். அவற்றை வழிபடுகின்றனர். அவைகளுக்கு செய்யப்படும் வழிபாடு அவற்றின் பசியைப் போக்கும் என்றும் நம்புகின்றனர். மேலும் பல விதமான நம்பிக்கைகளைப் பின்பற்றுகின்றனர்.

- ◊ தாட்டி(தாண்டி) வைத்தல் – கருவுற்ற பெண், இளம் தாய்மார்கள், வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள் ஆகியோரின் நோய்களைத் தீர்ப்பதற்கு மந்திரம் பொருட்களை வைத்து தாண்டச் செய்தலாகும்.
- ◊ பேயோட்டுதல்
- ◊ சுற்றிப்போடுதல்
- ◊ முட்டை பதித்தல்
- ◊ மிளகாய் அரைத்துப் பூசுதல்
- ◊ செய்வினை
- ◊ சகுனம்
- ◊ மறுபிறப்பு
- ◊ இறை வழிபாடு போன்ற மூடநம்பிக்கைகளையும் மேற்கொள்கின்றனர்.

## திருவிழாக்கள்

இரவாளப் பழங்குடிகள் தனித்தனி ஊர்களாகப் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். தங்களுடைய ஊர்களுக்கு முன்பே தங்கள் தெய்வத்திற்கான கோவில் கட்டி வழிபடுகின்றனர். இவர்களுடைய குல தெய்வம் மாரியம்மன் என்கின்றனர். மாரியம்மனுக்கு வருடந்தோறும் திருவிழா கொண்டாடப்படுகிறது. மேலும் காளி, முனி, கன்னிமார், கறுப்பராயன் இவர்களுடைய வழிபடு தெய்வங்களாக உள்ளன.

## உறவுமுறைப் பெயர்கள்

இரவாளன் பழங்குடிகளின் உறவுமுறைப் பெயர்கள் தமிழக உறவுமுறைப் பெயர்களை ஒத்துள்ளன. அம்மா, நங்கையாள், கொழுந்தியாள், தங்கை, தம்பி, பேரன், பேத்தி, மருமகன், மருமகள், மகன், மகள் போன்ற பெயர்கள் எந்த மாற்றமும் இன்றிப் பயன் படுத்தப்படுகிறது. மலையாள மொழி உறவுமுறைப் பெயர்களும் பயன்படுத்தப் படுகிறது. சகோதரன், சகோதரி, மைத்துனன் ஆகியவற்றிற்கான மலையாளப் பெயர்கள் பயன்படுத்தப்படுகிறது.

இரவாளப் பழங்குடிகள் இத்தகைய பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றிருந்தாலும் மாறி வரும் காலச்சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களுடைய பண்பாடுகளில் கலப்பும் மாற்றமும் ஏற்படத்தான் செய்கிறது.

## முடிவுரை

இரவாளன் அல்லது வில்வேடன் என அழைக்கப்படும் இப்பழங்குடிகள், முற்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்களான ‘இறவுளர்’ கூறப்படுகிறது. இவர்களுடைய ‘கரிநாவிளு’ மொழியும் தமிழில் இருந்து பிரிந்ததுதான் என்றும் கூறப் படுகிறது. இவற்றை வைத்துப் பார்க்கும் போது, இவர்கள் தமிழகப் பழங்குடிகள் தான் என்று நம்பப்படுகிறது. இத்தகைய தொல்குடி இனத்தைச் சார்ந்த இரவாளப் பழங்குடியினரின் மொழியையும், பண்பாட்டையும் பாதுகாக்கவும் நோக்கிலும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் கல்வியையும் மேம்படுத்தும் நோக்கிலும் இக்கட்டுரை அமைகிறது.

## துணைநூற்பட்டியல்

1. இரவாளர் பழங்குடிகளின் வாழ்வியல், டாக்டர் த.விஜயலட்சுமி, திருக்குறள் பதிப்பகம் - 2008.
2. தென்னிந்திய குலங்களும் குடிகளும் தொகுதி இரண்டு, தமிழாக்கம் முனைவர் க.ரத்னம், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு - 2010..
3. தமிழகப் பழங்குடிகள், பக்தவத்சல பாரதி, அடையாளம் பதிப்பகம் - 2018.
4. தமிழியம், பேராசிரியர் ச.அகத்தியலிங்கனார் நினைவு கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள், நியூவிஷன் வெளியீடு-மார்ச் 2010.
5. The Indigenous Speech Varieties If Tribal Communities of Tamilnadu A Study, V.Gnanasundaram, Published By Central Institute of Classical Tamil -2024.